16 மே 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 7 ஆம் ஞாயிறு

## எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:

**நன்மையிலும் மற்றும் சோதனை நாட்களிலும் ஒன்றித்திருப்பது**



# இயேசுவோடு ஒரு முடிவில்லாத நட்பு

**இவ்வாறு ஒரு நம்பிக்கையுள்ள நண்பரைத் தேடிக் கண்டடைய முடியுமா? நம்முடைய துயரங்களில் யார் பங்கு பெறுவார்? நம்முடைய பலவீனங்கள் அனைத்தும் இயேசுவுக்குத் தெரியும்.**

இந்தப் பொருள் பொதிந்த வரிகள் அடங்கிய ஒரு ஆங்கிலப் பாடல் உள்ளது. (What a friend we have in Jesus) இந்தப் பாடலை ஒவ்வொரு இறப்புத் திருப்பலியிலும் நாம் பாடக் கேட்டுள்ளோம். இது நமக்கு ஆறுதல் அளித்து, ஆண்டவர் நம்மோடு இணைந்திருந்த வாழ்வை நினைவூட்டுகின்றது. இப்போது ஒரு கற்பனைக் காட்சியை நம் கண்முன் கொண்டுவருவோம். இயேசுவின் இறப்பு நிகழ்வில் நாம் இருக்கிறோம். இப்போது தான் நாம் அவரை இழந்துவிட்டோம் என்று நினைத்துக்கொள்ளுங்கள். இதுபோன்ற ஆழமான நட்புறவில் அவரோடு நெருக்கமாக இருந்திருந்தால், இந்த பாடலின் வரிகள் நமக்கு ஒரு ஆழமானப் பொருளைத் தரும். நாம் அவரோடு கொண்டுள்ள நட்புறவில் எல்லாக் காலத்திற்கும் நிலைத்திருக்க வேண்டுமென்று இயேசு நமக்காக ஏங்குகின்றார்.

இன்றைய நற்செய்தியில் இயேசு தம் தந்தையிடம் கூக்குரலிடுகின்றார். அவருடைய முடிவு நெருங்கிவிட்டதை அறிந்த அவர், தம் சீடர்களைக் காத்துக்கொள்ளுமாறு தந்தையிடம் மன்றாடுகின்றார். தியாகம் நிறைந்த அன்பின் முக்கியத்துவத்தை தம் சீடர்களுக்குக் கற்பிக்க விரும்புகிறார். முதல் வாசகமான திருத்தூதர் பணிகள் நூலில் கிறிஸ்து தம் அப்போஸ்தலர்களோடு எவ்வளவு நெருக்கமாகப் பயணித்தார் என்பதைப் பேதுரு குறிப்பிடுகின்றார். இயேசுவைக் காட்டிக் கொடுத்தவருக்கு மாற்றாக வேறொரு நபரைத் தேர்ந்தெடுக்கும்போது, பேதுரு அதே அளவுகோல்களை அமைக்கின்றார். இயேசு தாம் உலகில் செய்த தூதுரையைப் பற்றியும் இயேசுவைப் பற்றியும் தனிப்பட்ட வகையில் அறிந்திருக்க வேண்டும்.

இன்று நமக்கும் அதே செய்திதான் தரப்படுகின்றது.. கிறிஸ்துவின் சீடராக, தூதுரைப் பணி செய்வோருக்கும் அதேத் தரம் நிலைநிறுத்தப்படுகிறது. கிறிஸ்துவை நாம் நெருக்கமாக அறிந்திருக்காவிட்டால், நாம் எவ்வாறு அவருடைய தூதுரைப் பணியில் பங்கேற்க முடியும். ஆண்டவரை அறிந்துகொள்வதில் இப்போதும் கூட காலம் கடந்துவிடவில்லை. இயேசுவோடு நாம் நண்பராக இருப்பதென்பது, அவருடன் இருக்கும் முடிவில்லா நட்புறவை ஆழப்படுத்த இருக்கும் அனைத்து வழிகளையும் கண்டுபிடிப்பதாகும். நம்முடைய நேரத்தை முறைப்படுத்தி, இறைவார்த்தைக்கு நம் உள்ளங்களைத் திருப்பவும், நம்முடைய ஆன்மீகத்தை ஆழப்படுத்தவும் வேண்டும். நம்முடைய ஆன்மீகம் ஆழமடையும்போது, கிறிஸ்துவுடனான நம்முடைய நட்பும் அடுத்த நிலைக்குச் சென்று கடவுள் நம்மை அன்புச் செய்ததைப் போலவே, நாம் பிறரையும் அன்பு செய்வோம். எனவே கடவுள் நம்மிலும் நாம் அவரிலும் இருக்கும்வரை, கிறிஸ்து நம்மிடம் கேட்ட அனைத்தையும் நம்மால் நிறைவேற்ற முடியும். அவர் இல்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய இயலாது.

எனவே, நம்முடைய வாழ்வை அவர் பக்கம் திருப்பி, தூய ஆவியின் தூண்டுதலுக்கு அடிபணிவோம். ஆண்டவர் கூறியுள்ளார்: நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன். அவருடைய வருகைக்காக காத்திருக்கும் நாம், அவருடைய மாபெரும் மகிமைக்காக அர்த்தமுள்ள வாழ்வை வாழ்வோம்.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

“கடவுள் நம்மோடு இணைந்திருப்பார்; அவரது அன்பு நம்மிடம் நிறைவு பெறும்”

(1 யோவான் 4: 12)

**இன்றைய வாசகங்கள்:**

திரு.பணி 1: 15-17, 20-26

திருபாடல் 103: 1-2, 11-12, 19-20

1 யோவான் 4: 11-16

யோவான் 17: 11-19

INTERNAL CIRCULATION ONLY
BUL 20/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org